பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 05 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஸ்வீடன் பிரதமர் திரு உல்ஃப் கிறிஸ்டர்சனுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்ததாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. அனைத்து மக்களுக்கும் தரமான சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் ஒருசில இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஸ்வீடன் பிரதமர் திரு உல்ஃப் கிறிஸ்டர்சனுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்தது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த சந்திப்பின்போது, அந்நாட்டு இளவரசி விக்டோரியா கலந்துகொண்டது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

அப்போது அவர், ஸ்வீடன் மன்னர் மற்றும் ராணி ஆகியோரின் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டதாகவும், அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக விழுமியங்கள், நிர்வாக நெறிமுறைகள் மற்றும் மக்கள் தொடர்பு ஆகியவற்றில் வலுவான அடித்தளம் கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அனைத்துத் துறைகளிலும் இணைந்து செயல்படுவதென இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வர்த்தகம், பாதுகாப்பு, புதுமைக் கண்டுபிடிப்புகள், செயற்கை நுண்ணறிவு, பருவநிலை மாற்றம் போன்ற பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதித்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டது.

18-ம் நூற்றாண்டில் ஆசிய நாட்டைச் சேர்ந்த தலைவருக்கு முதல் முறையாக வழங்கப்பட்டுள்ள இந்த விருதை, இந்தியாவின் 140 கோடி மக்களுக்கு சமர்ப்பிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது இரு நாடுகளிடையேயான வலுவான நாகரிக பிணைப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழல் காரணமாக உலக அளவிலான எரிபொருள் விநியோகம் மற்றும் வர்த்தக நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்தும் இரு தலைவர்களும் தங்களது கருத்துகளை பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர்.

இந்தியா-ஸ்வீடன் இடையே பாதுகாப்பு, அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், தேசிய அரியவகை கனிமவள இயக்கம் மற்றும் மேக் இன் இந்தியா போன்ற திட்டங்களின்கீழ் முதலீடு செய்ய முன்வருமாறு ஸ்வீடன் நிறுவனங்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இதனிடையே கோதென்பர்கில் ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி உர்சுலா வான் டெர் லேயன் உடன் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்ததாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொழில்துறை, முதலீடு மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு துறைகளில் ஏராளமான வாய்ப்புகளை வழங்க வகை செய்யும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு ஸ்வீடன் நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளதற்று மக்களைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த விருது பிரதமரின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய

தலைமைத்துவ பண்பிற்கு கிடைத்த அங்கீகாரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில் இந்தியா மீதான நன்மதிப்பு அதிகரித்து வருவதை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு இந்தியரும், உத்வேகம் பெறுவதற்கும், பெருமை கொள்வதற்குமான தருணம் இது என்று திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டில் 60 நாட்களுக்குத் தேவையான கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களின் உற்பத்தி திறனும் அதிகரிக்கப்பட்டுள்ளதையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற தவறான செய்திகளைக் கண்டு மக்கள் பதற்றமடைய வேண்டாம் என்றும், அரசின் அதிகாரபூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும் என்றும் மத்திய பத்திரிகை தகவல் அலுவலகம் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<>>>>

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர் கூறியுள்ளார்.

கோபாலபுரம், நுங்கம்பாக்கம் மற்றும் கில் நகரில் உள்ள விளையாட்டு மைதானங்களை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் அங்குள்ள விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடிய அவர், அவர்களுக்குத் தேவையான வசதிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து கில் நகர் பூங்காவை ஆய்வு செய்த அவர், அங்கு மேற்கூரை, கண்காணிப்பு கேமரா, மற்றும் கழிவறை வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு திரு. J.C.D. பிரபாகர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

அனைத்து மக்களுக்கும் தரமான கல்வி மற்றும் சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவெக அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்று கூறினார்.

ராசிபுரத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனையை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கிளாண்டர்ஸ் வைரஸ் குறித்து மக்கள் அச்சமடையைத் தேவையில்லை என்று அவர் கூறினார்.

தெரு நாய்களிடம் இருந்து ரேபிஸ் பாதிப்பு ஏற்படாமல் இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் வாகன நெரிசலைக் குறைக்கும் வகையில் ஆன்லைன் வாயிலாக நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த நடைமுறை காரணமாக சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Rajasekar — 39 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

இந்தியா-மியான்மர் எல்லைப் பகுதி வழியாக போதைப்பொருள் கடத்தப்படும் முயற்சிகளை போதைப்பொருள் தடுப்பு வாரியம் முறியடித்துள்ளது.

------------

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவை குறிவைத்து யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் இந்தியர் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

------------

பங்களாதேஷில் தட்டம்மை நோய்க்கான தடுப்பூசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் திரு. சர்தார் முகமது ஷகாவத் உசைன் தெரிவித்துள்ளார்.

------------

சத்தீஷ்கட் மாநிலத்தல் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

------------

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ராஜ்தானி விரைவு ரயிலில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து விசாரணை நடத்த உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

------------

திரிபுராவில் நடைபெறும் வர்த்தக மாநாட்டில் பங்கேற்குமாறு ரஷ்ய பிரதிநிதிகளுக்கு அம்மாநில அரசு அழைப்பு வித்துள்ளது.

------------

திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

------------

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையை ஒட்டிய வனப் பகுதிகளில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க வனத்துறை மற்றும் காவல்துறை இணைந்து தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

------------

முட்டையின் தேவை அதிகரித்துள்ளதன் காரணமாக அதன் விலை மேலும் உயரக்கூடும் என்று நாமக்கல் மாவட்ட முட்டை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளார்.

------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் கோடைக்கால டேபிள் டென்னிஸ் பயிற்சி வகுப்புகள் தொடங்கியது.

------------

தமிழகத்தில் நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல் உட்பட பல்வேறு பகுதிகளில் அடுத்த 6 நாட்களுக்கு கனமழை பெய்ய

வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக் கடல் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 4 நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் அப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே பழனி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று கனமழை பெய்தது.

இதன் காரணமாக விளைநிலங்களுக்குள் மழைநீர் தேங்கியுள்ளதால் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 23 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.**

**தரம்சாலாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்தது.**

**223 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பஞ்சாப் அணி 8 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்தது.**

**மற்றொரு போட்டியில், தில்லி அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.**

**இன்று நடைபெறும் போட்டியில், சென்னை அணி - ஐதராபாத் அணியை எதிர்கொள்கிறது.**

**சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

---------------

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கிடையேயான ஆட்டம் டிராவில் முடிந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.**

**காசி அணி - தில்லி அணிகளுக்கிடையேயான மற்றொரு ஆட்டம் கோல் எதுவுமின்றி டிராவில் முடிந்தது.**

**இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில், கேரளம் அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.**

**எர்ணாகுளத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**